

பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி ஹவுசிங் போர்டு சேக்காடு தரைபாலம் , அன்னனூர் ரயில்வே மேம்பாலத்திற்கு ஏரிக்குச் செல்லும் கால்வாயிலிருந்து மழை நீரை வெளியேற்றும் பணிகள், பூந்தமல்லி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருந்து மழைநீர் வெளியேற்ற பணிகள் திருவேற்காடு கோ–வா ஆப்ரேட்டிவ் நகர் பகுதியில் தேங்கியிருக்கும் மழை நீரை அகற்றும் பணிகளையும் நகர்புற உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரபு சங்கர், பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, வேளாண்மை துறை இயக்குனர் முருகேஷ், ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் ஆவடி மாநகராட்சி ஆணையர் கந்தசாமி, நகர மன்ற தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதாபேபிசேகர், ஜோதிலட்சுமி நாராயணபிரசாந்த், என்.இ.கே.மூர்த்தி, காஞ்சனா சுதாகர், ஜி.ஜெரால்டு, சன்பிரகாஷ், ஜி.ஆர். திருமலை, ப.ச.கமலேஷ், ஜி.நாராயண பிரசாத், பொன்விஜயன், உள்பட மாநகராட்சி நகராட்சி அதிகாரிகள் மாமண்ட நகர மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களின் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து வருவாய்த்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் நேற்று முன்தினம் (15.10.2024) மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி ஆக்ரிதி சேத்தி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில்

# பல்துறை சார்பில் நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்! ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, அக். 17-

கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், இராயக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11 ம் வகுப்பு பயிலும் 527 மாணவ, மாணவிகளுக்கு ரூ.25 இலட்சத்து 39 ஆயிரத்து 880 மதிப்பில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்குதல், ரூ.9 இலட்சத்து 90 ஆயிரம் மதிப்பில் புதிய நூலக கட்டிடத்தை திறந்து வைத்தல், கிருஷ்ணகிரி நகர கூட்டுறவு வங்கி எண்.118.சூளகிரி கிளை, 5 மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ரூ.79 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு கடன் உதவிகள், மேலுமலை மற்றும் சின்னார் ஊராட்சியில் ரூ.6 கோடியே 64 இலட்சம் மதிப்பில் தார்சாலை பணிகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம். சரயு , மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஒசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.முருகன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி கல்வி துறைக்கு ரூ.44 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து பள்ளி பயிலும் மாணவ, மாணவிகள் பள்ளி செல்ல ஏதுவாக விலையில்லா மிதிவண்டிகள், விலையில்லா சீருடை, புத்தகங்கள், காலணிகள் போன்றவற்றை வழங்கி வருகிறார்கள். அதனடிப்படையில் இன்று இராயக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11 ம் வகுப்பு பயிலும் 224 மாணவர்களுக்கு ரூ.தலா ரூ.4900 வீதம் ரூ.10 இலட்சத்து 97 ஆயிரத்து 600 மதிப்பிலும், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 11 ம் வகுப்பு பயிலும் 303 மாணவிகளுக்கு தலா ரூ.4760 வீதம் ரூ.14 இலட்சத்து 42 ஆயிரத்து 280 என மொத்தம் 527 மாணவ, மாணவிகளுக்கு ரூ.25 இலட்சத்து 39 ஆயிரத்து 880 மதிப்பில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாணவ, மாணவர்களின் பயன்பாட்டிற்காக பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.9 இலட்சத்து 90 ஆயிரம் மதிப்பில் கட்டடப்பட்டுள்ள புதிய நூலக கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 புதுமை பெண் திட்டம், மாணவர்களுக்கு மாதம் ரூ.1000 தமிழ் புதல்வன் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் உயர்கல்வி பயிலும் மாணவர்களின் சதவிகிதம் 36 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்விகலான மருத்துவம், பொறியியல், வேளாண், சட்ட பயில கல்லூரிகளில் 7.5 சதவிகிதம் ஒதுக்கீடு செய்து கொடுத்துள்ளார். இம்மாவட்டத்தில் பயிலும் மாணவர்கள் கடந்த ஆண்டு 10 வகுப்பு தேர்வில் 2 வது இடம் பிடித்துள்ளார்கள். இவ்வாண்டு முதலிடம் பிடித்து பள்ளிக்கும், பெற்றோர்களுக்கும், மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும்.அதற்காக ஒரு குறிக்கோளுடன் கல்வி பயில வேண்டும்.

தொடர்ந்து, கிருஷ்ணகிரி நகர கூட்டுறவு வங்கி (வரை) எண்.118 சூளகிரி கிளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி நகர கூட்டுறவு வங்கியில் நகைக் கடன் ரூ.30 இலட்சமும்;, வீடு அடமானக் கடன் ரூ.20 இலட்சமும், வீடு கட்டும் கடன் ரூ.30 இலட்சமும், பணிபுரியும் மகளீர்க் கடன் ரூ.15 இலட்சமும், மகளீர் தொழில் முனைவோர் கடன் ரூ.1 இலட்சமும், உடல் ஊனமுற்றோர் கடன் ரூ.1 இலட்சமும், சிறுபான்மையினர் கடன் ரூ.2 இலட்சமும், சிறுவணிகக் கடன் ரூ.1 இலட்சமும், கூட்டு பொறுப்பு குழு கடன் நபர் ஒருவருக்கு அதிக பட்சம் ரூ.1 இலட்சமும், சுய உதவிக் குழுக் கடன் ரூ.20 இலட்சமும் வழங்கப்படுகிறது. மேலும், வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு பெட்டக வசதி குறைந்த வாடகையிலும், வாடிக்கையாளர்களின் இட்டு வைப்புகளுக்கு ரூ.5 இலட்சம் வரை காப்புறுதி வழங்குகின்றது. மின்னனு பணப்பரிமாற்றம் முறையில் வாடிக்கையாளர்களுக்கு விரைவாக பணப்பரிமாற்றம் செய்து வழங்குகின்றது. தொடர்ந்து, கூட்டுறவு துறை சார்பாக 5 மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ரூ.79 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான பால் பண்ணை வியபாரம், தொழில் அபிவிருத்தி, கல்வி கடன், வீட்டு அடமான கடன் உதவிகளும், 7 பயனாளிகளுக்கு ரூ.15 இலட்சம் மதிப்பிலான வைப்புத்தொகைக்கான ரசீதுகள் வழங்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்காக பழுதடைந்த சாலைகளை பராமரிப்பு செய்தும் மற்றும் புதிய சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது. அதன்படி இன்று (14.10.2024) சூளகிரி ஊராட்சி ஒன்றியம், மேலுமலை ஊராட்சி, பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டதின் கீழ், ரூ.2 கோடியே 18 இலட்சம் மதிப்பில் மேலுமலை முதல் பாலகொண்டராயதுர்கம் வரை மற்றும் சின்னார் ஊராட்சியில் பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டதின் கீழ், ரூ.4 கோடியே 46 இலட்சம் மதிப்பில் சின்ன பேடப்பள்ளி, பெரியபேடப்பள்ளி, சின்னமட்டமனூர் வரை தார்சாலை பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவாகவும், தரமாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன் , ஒசூர் சார் ஆட்சியர் பிரியங்கா , தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப் பதிவாளர் செயலாட்சியர் .எஸ்.மலர்விழி, மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் ஷேக் ரசீத், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சதீஷ்பாபு, உமாசங்கர், முருகன், மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி , பொருளாளர் சுகுமாரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வீரா ரெட்டி ,எல்லோரா மணி , பொதுக் குழு உறுப்பினர் ஜெயராமன்,

ஒன்றிய செயலாளர்கள் சின்ராஜ், பாக்கிராஜ், நாகேஷ், ரகுநாத் ,கருணாகரன் , காளிங்காவரம் தலைவர் துர்கா ஹரி பாபு,மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

## திருவள்ளூர் மாவட்டம் – ஆவடி, திருவேற்காடு பகுதிகளில்

# அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கொட்டும் மழையில் ஆய்வு!

திருவள்ளூர், அக். 17-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுன்படி வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆவடி மாநகராட்சி திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் உள்ள பல்வேறு இடங்களில் சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆவடி மாநகராட்சி ஶ்ரீராம் நகர் சத்திய நகர் சேக்காடு திருவேற்காடு நகராட்சி ராஜாங்குப்பம் எஸ்.பி. குடியிருப்பு பகுதிகளில் கொட்டும் மழையில் நேரில் பார்வையிட்டு மற்றும் கால்வாய்கள் தரை பலம் மேம்பாலும் உள்ளிட்ட பகுதிகளில் தேங்கியிருக்கும் மழை நீரை ராட்சத எந்திரம் மூலம் நீரே வெளியேற்றும் பணியில் ஈடுபட்டு மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உடனடியாக கண்காணிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்து மேலும் தேங்கியிருக்கும் மழை நீர் குப்பைகள் உடனடியாக அகற்ற வேண்டும் என்று தெரிவித்தார்.

உடன் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் ஆவடி மாநகராட்சி ஆணையர் கந்தசாமி, நகர மண்டல தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், என்.இ.கே.மூர்த்தி உள்பட அரசு அதிகாரிகள், மாநகராட்சி, நகராட்சி ஊழியர்கள், மாமன்ற நகர்மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தலைமையில் நடைபெற்றது. உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், அரசு அருங்காட்சியகம் இயக்குநருமான கவிதா ராமு, மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின், கூடுதல் ஆட்சியர் மு.ஷபீர் ஆலம், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உமாமகேஷ்வரிசங்கர் ஆகியோர் உள்ளனர்.

# விழுப்புரம் தெற்கு மாவட்டக் கூட்டம்!

### மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை !



விழுப்புரம், அக். 17-

கழகத் தலைவர் - முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆலோசனைக்கிணங்க விழுப்புரம் (தெற்கு) மாவட்டத்திற்கு உட்பட்ட விழுப்புரம் மற்றும் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று 17.10.2024 -வியாழக்கிழமை ) காலை 9.30 மணிக்கும் திருக்கோவிலூர் மற்றும் வானூர் சட்டமன்றத் தொகுதிகளை சேர்ந்த பாக முகவர்களின் கூட்டம் 17 10 2024 ( வியாழக்கிழமை ) மாலை 3 மணிக்கும் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.

மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தலைமையில் கழக துணைப் பொதுச்செயலாளர் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி சிறப்புரையாற்ற உள்ள இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக தலைமைக் கழக தொகுதி பார்வையாளர் கள்துரை கி.சரவணன் (விழுப்புரம்) , திரு.சி.கார்த்திகேயன் ( திருக்கோவிலூர்), கு.கருணாநிதி (வானூர்), சிவ.ஜெயராஜ் (விக்கிரவாண்டி ) ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்

மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா , இரா. இலட்சுமணன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் T.N.முருகன் , தயா. இளந்திரையன், இரா.கற்பகம் , மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் , ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் , பாக முகவர்கள் (B.L.A. 2) , கிளைக் கழக செயலாளர்ள், வார்டு செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஒதியத்தூர், சென்னாலூர்ஆகிய கிராமங்களில் புதியதாக கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், துணை சேர்மன் ஜெயபாலன், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஹரி, தாட்சயாயினி கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சு. ஜம்புலிங்கம்

### அக்டோபர் 17 (2004)



**இளமைக் காலத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு, மாவட்ட பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராக பத்து ஆண்டுகளுக்கு மேலாகவும், பகுதிச் செயலாளராகவும், மாவட்ட துணைச் செயலாளராக இருமுறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். கலைஞர் நகர் பகுதி உருவாக்கியபோது, அப்பகுதிக் கழகத்தின் முதல் பொறுப்பாளராகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**சென்னை மாநகராட்சி 131வது வார்டு கவுன்சிலராக இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதியில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**